முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிருகுமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.05.2019, புதன்கிழமை

1. **யோக ஞான கீர்த்தியே அரங்கா**
**யோகிகள் துணை கொண்ட அரசா**
**வாகுடனே உன்னால் உலக மாற்றம்**
**வல்லமைபட நடந்தேறுமெனக் கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விகாரி விடை திங்கள்**
**தெரியவே முதல் திகதி புந்தி வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 1ம் நாள் 15.05.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு பிருகுமகரிஷி யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வு கருதி ஞானியர் தரும்
ஞானக் கொள்கைகள் அனைத்தும்
ஞானயுகம் படைக்க நேரும்
4. நேருமைபட அரங்கன் வகுத்த
நீதிநெறி வழிகள் மாறா
தருமம் காத்து மக்கள் வருக
தரணியெங்கும் தருமபலம் பெருகி
5. பெருகியே ஆறுமுகனார் வெளிப்பாடு
பிசகில்லா யாவர்க்கும் இலகுவாகி
முருகன் ஆளுமை உருவாகும்
முழுமை ஞானம் வரும் மக்கள்
6. மக்கள் அனைவருக்கும் கிட்டி
மண்ணுலகம் பலம் பெறும்
தேக்கமிலா ஞான ஆட்சியும்
தெய்வீக மிகுந்த நிலையும் கூடும்
7. கூடுமே தலைவன் முருகன்
குருராசன் வழி அருளும்
நாடெங்கும் ஆளும் வல்லமை
நன்மையும் மேன்மையும் உண்டாகும்
8. ஆகவே பாரதம் எங்கும்
அற்புதம் ஞான பலமாகி
வகை வகையான குருமார்கள்
வலம் வந்து முருகன் வழிபாடு
9. வழிபாடு பெருகி கலியுகமே
வளமும் சிறந்த ஆளுமையும்
தெளிவும் ஆளுமை வழி திடமும்
தேவைகள் பூர்த்திபடும்படியான வண்ணம்

10. வண்ணமுடன் சேவைகள் பெருகி
வளர்ந்து சிறந்து ஓங்கும்
எண்ணம் வழி குருவருளால்
எல்லா மக்களும் திடம் கண்டு

11. கண்டுமே அரங்கன் வழியே
கலியுகத்தார் சிறப்பு பல கண்டுமே
தொண்டுவழி அழியாமை பெறுவர்
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

யோக ஞானங்களுக்கும் பெருமை சேர்க்கும் வல்லமைமிக்க யோக ஞானசித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே, யோகிகளை துணையாக கொண்டிட்ட ஞானஅரசனே அரங்கா உம்மால் உலகமாற்றம் வல்லமையுடன் நடந்திடும் என்றே உலகறிய உமது பெருமைகளைக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் முதல் நாள் 15.05.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பிருகுமகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிருகுமகரிஷி.

உலக மக்களின் உயர்விற்காக யுகமாற்றம் தந்திடவே ஞானிகள் தருகின்ற அரங்கமகா தேசிகனார் தருகின்ற ஞானக்கொள்கைகள் எல்லாம் ஞானயுகத்தினை இவ்வுலகினில் படைத்திடுமப்பா. சத்தியமும் நேர்மையும் தயாள குணமும் உடையதாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வகுத்திட்ட நீதிநெறிகளின் வழிமுறைகளை மாறாது கடைப்பிடித்து தர்மங்களை கடைப்பிடித்து மக்களெல்லாம் பின்பற்றி வரவர, உலகமெங்கும் தருமபலம் பெருகி முருகப்பெருமானின் வெளிப்பாடு தவறாமல் எளிமையாக உலகினில் நடந்தேறும் மிக எளிதாக உலகினில் முருகப்பெருமானின் ஆட்சி உருவாகிடும்.

உண்மை ஞானத்தினை பூரண ஞானத்தினை அரங்கனின் கொள்கைகளை கடைப்பிடிப்போர் எல்லாம் பெற்று, இந்த உலகமே ஞானபலம் மிக்க உலகமாக மாறிடும். இந்த உலகமே ஞானிகளின் அருள்பலத்தை பெற்றிடும். உலகினில் தடையற்ற ஞானஆட்சியும் உண்டாகி உலகினில் தெய்வீக நிலையும் பெருகிடுமப்பா.

ஞானத்தலைவன் முருகப்பெருமானே உலகின் மெய்ஞான குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக அருள் செய்து நாடெங்கும் ஆளும் வல்லமையும் மேன்மையும் உண்டாகும்.

ஆதலினாலே பாரத தேசமெங்கும் அற்புதங்கள் அதிகமாகி ஞானமும் பெருகி பாரததேசமே ஞானபலம்மிக்க நாடாக ஆகி பலவகையான குருமார்களும் பணிந்து வந்து முருகப்பெருமானை பின்பற்றி நடப்பர். ஆதலினால் உலகமெங்கும் முருகப்பெருமானின் வழிபாடுகள் பெருகி இந்த கலியுகமே சர்வவளமும் பெருகி, சிறப்புமிக்க ஆளுமையும் நல்ல தெளிவும் உண்டாகி நாட்டை ஆள்பவர்கள் மூலமாக ஞானிகளின் ஆட்சியாம் ஞானஆட்சி மூலமாக சர்வதிடமும் நாடு பெற்று, மக்களின் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும்விதமாக நாடெங்கும் தொண்டுணர்வு பெருகி தொண்டுகள் எல்லாம் சிறப்படைந்து நாடு நல்ல முன்னேற்றத்தை அடைந்திடும்.

மக்களின் எண்ணங்கள் எல்லாம் குரு அரங்கனின் அருளால் திடமான அறிவைப் பெற்று அரங்கரின் மூலமாக சிறப்புகளை பலவிதமாய் உலகோர் பெற்று தொண்டுகள் மூலமாக அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை பெறுவார்கள் எனக் கூறுகிறார் மகான் பிருகுமகரிஷி.

–சுபம்–